[1991 அக்டோபர் 3

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 135, திரு. இரா. நடேசன், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

135— திருவட்டாறில் நடுவர் நீதிமன்றம்.

*1407. திரு. இரா. நடேசன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறில் ஒரு நடுவர் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறில் ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமைக்க வேண்டுமென பொதுமக்களிடமிருந்தோ, வழக்கறிஞர் சங்கத்திடமிருந்தோ, அல்லது கன்னியாகுமரி மாவட்ட தலைமை குற்றவியல் நீதிபதியிடமிருந்தோ கோரிக்கை எதுவும் பெறப்படவில்லை. அப்படி பெறப்பட்டால் நிதி நிலைக் கேற்ப அதனை பரிசீலனை செய்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் தொகுதியி லிருந்து கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிறைய பெட்டிஷன்ஸ் கொடுத்திருந்தோம். ஏனென்றால், திருவட்டார் தொகுதியில் உள்ள மக்கள் எல்லாம் நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால் அப்பர் கோதையாறிலிருந்து 80 கிலோ மீட்டர் வந்து தான் தக்கலை, குழித்துறை ஆகிய இடங்களுக்குச் செல்ல வேண்டும். அதுமட்டுமல்லாமல், பக்கத்தில் உள்ள பேச்சிப்பாறை போன்ற பகுதிகள் வனப்பிரதேசமாக இருப்பதால் அருள்கூர்ந்து இந்தப் புரட்சித் தலைவி அவர்களின் நீதியான ஆட்சிக்காலத்தி லாவது திருவட்டார் தொகுதி மக்களின் நன்மையைக் கருதி, திருவட்டாறில் ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் வரவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. நடேசன் அவர்களுடைய இந்த யோசனையையே மக்களுடைய யோசனையாக ஏற்றுக் கொண்டு திருவட்டாறில் ஒரு குற்றவியல் நீதிமன்றத்தை விரைவில் அமைக்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு நடவடிக்கையெடுக்கும்.